சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்– சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 19 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளை நிலை உயர்த்துதல் – நிருவாக ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந–7)துறை

அரசாணை (நிலை) எண்.22

நாள்: 08.02.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052,
சார்வரி தை மாதம் 26 –ஆம் நாள்,
படிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் நல ஆணையரின் கடித ந.க. எண். க2/5452/2018, நாள் 09.04.2020.

******

ஆணை :–

2020–2021–ஆம் ஆண்டிற்கான, வரவு செலவு கூட்டத் தொடரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சட்டப் பேரவை விதி எண்.110–இன் கீழ், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக வெளியிட்ட அறிவிப்புகளுள் கீழ்க்கண்ட அறிவிப்பும் ஒன்றாகும்:–

> "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் நலனை கருத்தில் கொண்டு, 6 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 5 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 17 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் ரூ.48.74 கோடி மதிப்பீட்டில் நிலை உயர்த்தப்படும்".

2. மேலே படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்திடும் பொருட்டு, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் நீங்கலாக, ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளுள் தேவையின் அடிப்படையில், 6 ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 3 ஆதி திராவிடர் நல நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் மற்றும் 10 ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்திடலாம் எனவும், நிலை உயர்த்தப்படும் பள்ளிகளுக்கு ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு சம்பளம் உள்ளிட்ட தொடரும் செலவினமான ரூ.18,00,93,912/– மற்றும் வகுப்பறை / ஆய்வுக்கூட கட்டிடங்கள், அறைகலன் உள்ளிட்டவற்றிற்கான தொடரா செலவினமாக ரூ.11,03,62,800/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு கோரி நிலை உயர்த்தக் கருதும் ஆதி திராவிடர் நல பள்ளிகளின் பட்டியலை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில், இவ்வரசாணையின் இணைப்பு–I ல் குறிப்பிடப்பட்டுள்ள 19 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளை, உத்தேச செலவினமான ரூ.29,04,56,712/– (ரூபாய் இருபத்தொன்பது கோடியே நான்கு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எழுநூற்று பன்னிரெண்டு மட்டும்) மதிப்பீட்டில் நிலை உயர்த்த நிருவாக ஒப்பளிப்பு வழங்கிடவும், 2020–2021–ஆம் கல்வியாண்டு முடிவடைய உள்ள நிலையில் எதிர்வரும் நிதியாண்டில் (2021–2022) நிதி ஒப்பளிப்பு வழங்கிடவும் முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4. நிலை உயர்த்தப்பட்ட 19 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு இவ்வரசாணையின் இணைப்பு II–இல் கண்டவாறு ஊதிய ஏற்ற முறையில் 198 ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்களும், வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட ஏதுவாக 13 காவலர் மற்றும் 13 துப்புரவாளர் பணியிடங்களும் தோற்றுவிக்க நிருவாக ஒப்பளிப்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. நிலை உயர்த்தப்பட்ட ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு தேவையான தொடரும் மற்றும் தொடரா செலவினம் ஒப்பளிப்பு செய்வதற்கு ஏதுவாக, உரிய கருத்துருவினை எதிர்வரும் நிதியாண்டில் அதற்கான உட்கூறு விவரங்களுடனும் (Break up details), வகுப்பறை கட்டடங்கள், ஆய்வு கூட கட்டடங்கள், சுற்றுச் சுவர் கட்டுதல் தொடர்பாக தாட்கோவிடமிருந்து விரிவான மதிப்பீட்டு அறிக்கையினையும் பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண்.5162/ நிதி (ஆதி(ம)பந)/ (மை.ம.ஆ.பி) / 2021 நாள் 03.02.2021–இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்

ஆணையர், ஆதி திராவிடர் நலம், சென்னை – 600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை– 600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் / ராணிப்பேட்டை / வேலூர்/அரக்கோணம்/ காஞ்சிபுரம் /செங்கல்பட்டு / விருதுநகர் / திண்டுக்கல் / பெரம்பலூர்/ கிருஷ்ணகிரி/ நாகப்பட்டினம் /மயிலாடுதுறை/கரூர்.
மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், விழுப்புரம் / ராணிப்பேட்டை / வேலூர்/அரக்கோணம்/ காஞ்சிபுரம் /செங்கல்பட்டு / விருதுநகர் / திண்டுக்கல் / பெரம்பலூர்/ கிருஷ்ணகிரி/ நாகப்பட்டினம் /மயிலாடுதுறை/கரூர்.
சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள். (ஆதி திராவிடர் நல ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்டக் கருவூல அலுவலர், விழுப்புரம் / ராணிப்பேட்டை / வேலூர்/அரக்கோணம்/ காஞ்சிபுரம் /செங்கல்பட்டு / விருதுநகர் / திண்டுக்கல் / பெரம்பலூர்/ கிருஷ்ணகிரி/ நாகப்பட்டினம்/ மயிலாடுதுறை/கரூர்.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18 / 35. (பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (கணக்குகள் மற்றும் பண வரவுகள்), சென்னை – 600 018.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 600 009.
அமைச்சர் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நிதித் (ஆதி (ம) பந)/ (மை.ம.ஆ.பி) துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

8/2/2021
பிரிவு அலுவலர்.
08/02/2021

## இணைப்பு–I

## அரசாணை (நிலை) எண். 22, ஆதி(ம)பந(ஆதிந7)துறை, நாள்.08.02.2021

### நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 6 ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிகள்

| | |
|---|---|
| விழுப்புரம் மாவட்டம் | 1. தென்கீரனூர், ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி |
| | 2. வி. நரையூர், ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி |
| | 3. விக்கிரவாண்டி, ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி |
| வேலூர் மாவட்டம் | 1. குரும்பேரி, ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி |
| | 2. ஆதியூர், ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி |
| | 3. நத்தம், ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி |

### உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 3 ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிகள்

| | |
|---|---|
| காஞ்சிபுரம் மாவட்டம் | மேலக்கோட்டையூர், ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி |
| விருதுநகர் மாவட்டம் | கோட்டையூர், ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி |
| வேலூர் மாவட்டம் | வேப்பூர், ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளி |

### மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் 10 ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள்

| | |
|---|---|
| காஞ்சிபுரம் மாவட்டம் | 1. பதுவஞ்சேரி, ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |
| | 2. இரும்பேடு, ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |
| | 3. நெரும்பபூர், ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |
| திண்டுக்கல் மாவட்டம் | அழகம்பட்டி, ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |
| பெரம்பலூர் மாவட்டம் | நத்தக்காடு, ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |
| கிருஷ்ணகிரி மாவட்டம் | அத்திபள்ளம், ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |
| நாகப்பட்டினம் மாவட்டம் | காரைமேடு, ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |
| விழுப்புரம் மாவட்டம் | வழுதாரெட்டி, ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |
| வேலூர் மாவட்டம் | ஆலங்காயம், ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |
| கரூர் மாவட்டம் | கோட்ட மேடு, ஆதிதிராவிடர் நல உயர்நிலைப்பள்ளி |

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

/பிரிவு அலுவலர்
08/02/2021

# இணைப்பு–II

| நடுநிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்படும் 6 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட வேண்டிய ஆசிரியர் பணியிடங்கள் | | | |
|---|---|---|---|
| பணியிடம் | ஊதிய நிலை | ஊதிய விகிதம் | எண்ணிக்கை |
| நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் | Level - 17 | ரூ.36700– 1,16,200 | 6 |
| பட்டதாரி ஆசிரியர் | Level - 16 | ரூ.36,400– 1,15,700 | (ஒரு பள்ளிக்கு 3 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் 18 வீதம் 6 பள்ளிகளுக்கு) |
| மொத்தம் | | | 24 |

| உயர்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்படும் 3 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட வேண்டிய ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்கள் | | | |
|---|---|---|---|
| பணியிடம் | ஊதிய நிலை | ஊதிய விகிதம் | எண்ணிக்கை |
| உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் | Level - 18 | ரூ.36,900– 1,16,600 | 3 |
| பட்டதாரி ஆசிரியர் | Level - 16 | ரூ.36,400– 1,15,700 | (ஒரு பள்ளிக்கு 3 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் 9 வீதம் 3 பள்ளிகளுக்கு) |
| தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் | Level - 15 | ரூ.36,200– 1,14,800 | 3 |
| இளநிலை உதவியாளர் | Level- 8 | ரூ.19500– 62000/– | 3 |
| தட்டச்சர் | Level- 8 | ரூ.19500– 62000/– | 3 |
| அலுவலக உதவியாளர் | Level- 1 | ரூ.15700– 50,000/– | 3 |
| மொத்தம் | | | 24 |
| காவலர் (வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவேண்டும்) | | | 3 |
| துப்புரவாளர் (வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவேண்டும்) | | | 3 |
| மொத்த பணியிடங்கள் | | | 30 |

| மேல்நிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்படும் 10 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் தோற்றுவிக்கப்பட வேண்டிய ஆசிரியர் / ஆசிரியரல்லாத பணியிடங்கள் | | | |
|---|---|---|---|
| பணியிடம் | ஊதிய நிலை | ஊதிய விகிதம் | எண்ணிக்கை |
| மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் | Level - 23 | ரூ.56,900–1,80,500 | 10 |
| முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் | Level - 18 | ரூ.36900–1,16,600 | 90 (ஒரு பள்ளிக்கு 9 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 10 பள்ளிகளுக்கு) |
| உடற்கல்வி இயக்குநர் | Level - 11 | ரூ.35,400–1,12,400 | 10 |
| உதவியாளர் | Level - 10 | ரூ.20,600–65,500/– | 10 |
| தட்டச்சர் | Level - 8 | ரூ.19500–62000/– | 10 |
| ஆய்வக உதவியாளர் | Level - 8 | ரூ.19500–62000/– | 10 |
| அலுவலக உதவியாளர் | Level - 1 | ரூ.15700–50,000/– | 10 |
| மொத்தம் | | | 150 |
| காவலர் (வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவேண்டும்) | | | 10 |
| துப்புரவாளர் (வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவேண்டும்) | | | 10 |
| மொத்த பணியிடங்கள் | | | 170 |

ஒட்டெம் டாய்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 8/2/2021
08/02/2021